بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *12/02/2021* அன்று இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நீண்ட கால சேவகர் கண்ணியத்திற்குரிய சவுத்ரி ஹமீதுல்லாஹ் சாஹிப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

இன்று நான் ஜமாஅத்தின் ஒரு நீண்ட கால சேவகர் கண்ணியத்திற்குரிய சவுத்ரி ஹமீதுல்லாஹ் சாஹிப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இவர் கடந்த நாட்களில் வஃபாத் ஆகி உள்ளார்கள். பாகிஸ்தானில் தஹ்ரீக்கே ஜதீத் உடைய வகீலே அஃலா -வாக இருந்தார்கள். சத்ர் மஜ்லிஸ் தஹ்ரீக்கே ஜதீத் அஞ்சுமன் அஹ்மதிய்யாவாகவும் இருந்தார்கள். நீண்ட காலமாக ஜல்ஸா ஸாலானா ஆபிசர் ஆகவும் நியமிக்கப்பட்டு இருந்தார்கள்.

**7** பிப்ரவரி **2021** அன்று தாஹிர் ஹார்ட் இன்ஸ்டிடியூட்டில் வஃபாத் ஆனார்கள். அப்போது வயது **87** ஆக இருந்தது. இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

கண்ணியத்திற்குரிய சவுத்ரி சாஹிபுடைய தந்தையார் பெயர் பாபு முஹம்மது பக்-ஷ் சாஹிப். தாயார் பெயர் ஆயிஷா பீபீ சாஹிபா ஆகும். பேராவின் புறநகர் பகுதியைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள்.

சவுத்ரி சாஹிப் **1934** ல் காதியானில் பிறந்தார்கள். இவரது தந்தையார் இவர் பிறப்பதற்கு **5** வருடம் முன்பு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டு இருந்தார்கள். சவுத்ரி சாஹிப் ஆரம்ப கல்வியை காதியானில் கற்றார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் வாழ்வை அர்ப்பணிக்கும் திட்டத்தை எடுத்து வைத்தார்கள். அதற்கு மறுமொழி கூறியவாறு இவரது தாயார் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) உடைய சந்நிதியில் இவரை அழைத்து வந்தார். ஹுஸூரிடம், இது எனது மகன்; இவனை நான் மார்க்கத் தொண்டிற்காக வக்ஃப் செய்கிறேன் என்றார்கள். **1949** ல் இவர் மெட்ரிக் பாஸ் செய்தார். பிறகு வக்காலத்தே தீவான் ரப்வாவின் வழிகாட்டலுக்கேற்ப இண்டர்வியூவுக்காக ரப்வா வந்தார்கள். எழுத்துத் தேர்வுக்குப் பிறகு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தாமே அவரை இண்டர்வியூ செய்தார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) உடைய வழிகாட்டல் படி இவரது கல்வி தொடர்ந்தது. ஸ்கூல் மற்றும் யூனிவர்சிடி கல்வியை கற்றார்கள். **1955** ல் தஃலீமுல் இஸ்லாம் காலேஜில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்கள். பிறகு கணிதத் துறையின் தலைவராக நியமிக்கப்பட்டார்கள். இவரது திருமணம் **1960** ல் ரஸியா கானம் சாஹிபாவுடன் நடந்தது. இவர் அப்துல் ஜப்பார் கான் சாஹிப் சர்கோதா உடைய மகள் ஆவார். **1974** வரை **T.I** காலேஜ் ரப்வாவில் தொண்டாற்றி வந்தார். அதன் பிறகு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இவர்களை விருந்தோம்பல் துறையில் நாஸிர் ஆக நியமித்தார்கள். **1982** ல் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) இவரை வகீலே அஃலா தஹ்ரீக்கே ஜதீத் ஆக நியமித்தார்கள். அத்துடன் சிறிது காலம் வரை அடிஷனல் சத்ர் மஜ்லிஸ் தஹ்ரீக்கே ஜதீத் ஆகவும் இருந்தார்கள். பிறகு **1989** ல் சத்ர் மஜ்லிஸ் தஹ்ரீக்கே ஜதீத் ஆக நியமிக்கப்பட்டார்கள்.

வஃபாத் வரை அப்பணியை தொடர்ந்தார்கள். இது தவிர **1986** முதல் மரணம் வரை அடிஷனல் நாஸிர் அஃலா -வாகவும் இருந்துள்ளார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் காலத்தில் உள்ளூர் அமீராக பணியாற்றுவதற்கான நற்பேறும் பெற்றார்கள். ரப்வாவின் உள்ளூர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மர்க்கஸியாவின் பல்வேறு பொறுப்புகளில் தொண்டாற்றி வந்துள்ளார்கள். பிறகு **1969** முதல் **1973** வரை சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மர்க்கஸியா -வாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். அக்காலத்தில் முழு உலகிலும் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஒரே தலைமையகம் இருந்தது. தலைமையகத்திலிருந்து அது கண்ட்ரோல் செய்யப்பட்டு வந்தது. ஒவ்வொரு நாட்டுக்கும் தனித்தனியாக சத்ர் நியமிக்கப்படவில்லை.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) **1970** ல் குத்தாமுல் அஹ்மதிய்யா மர்க்கஸியாவின் இஜ்திமாவில் சொற்பொழிவாற்றும்போது சவுத்ரி சாஹிப் பற்றி குறிப்பிட்டார்கள். "நான் களங்கமற்ற ஒரு இளைஞரை - அவருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் பௌதீக தொடர்பு இல்லாவிடினும் ஆன்மீக தொடர்பு மிகவும் உறுதியாக இருந்ததனால் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தலைமை பொறுப்பை அவரிடம் தந்தேன். அல்லாஹ் அவருக்கு பணி செய்யும் நல்வாய்ப்பு தந்தான். அவரது முயற்ச்சிகளில் பரக்கத்தை இட்டான். மேலும் நமது துஆவை ஒப்புக்கொண்டான்."

சவுத்ரி சாஹிபின் தலைமையில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) உடைய விருப்பத்திற்கேற்ப குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஒவ்வொரு துறையும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டது. **1974** -ன் நெருக்கடியான கால கட்டத்தில் சவுத்ரி சாஹிப் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) உடைய வழிகாட்டலுக்கேற்ப மிக முக்கிய தொண்டுகளை செய்து முடித்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) இலண்டன் ஹிஜ்ரத் செய்த பிறகு ஹுஸூர் (ரஹி) உடைய வழிகாட்டலுக்கேற்ப இங்கு வந்து ஒரு வருடத்தை விட அதிக காலம் தங்கியிருந்தார்கள். இங்கும் மர்கஸ் அமைப்பை நிலை நாட்டவும், செட் செய்யவும் பெரும் பங்கு ஆற்றினார்கள். **1982** முதல் **1999** வரை சத்ர் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் -வாக பணியாற்றும் வாய்ப்பை பெற்றார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத் நூற்றாண்டு ஜூப்லி திட்டமிடல் குழுவில் தலைவராக தொண்டாற்றும் நல்வாய்ப்பை பெற்றார்கள். **2003** ஏப்ரலில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) வஃபாத் ஆகிய போது கிலாஃபத் கமிட்டியின் தலைவராக இருந்து நடத்தும் வாய்ப்பும் பெற்றிருந்தார்கள். வகீலே அஃலாவாக ஐரோப்பா, ஆப்ரிக்கா மற்றும் பல்வேறு நாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ளார்கள். **1973** ல் கண்ணியத்திற்குரிய செய்யது மீர் தாவூது அஹ்மது சாஹிப் உடைய மரணம் நிகழ்ந்த போது, ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) இவரை ஜல்ஸா ஸாலானா ஆபிசராக நியமித்தார்கள். **1973** லிருந்து வஃபாத் வரை ஆபிசர் ஜல்ஸா ஸாலானாவாக பணியாற்றினார்கள்.

**1991** ல் காதியான் ஜல்ஸா ஸாலானா நடந்த போது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) இவரை ஆபிசர் ஜல்ஸா ஸாலானாவாக நியமித்தார்கள். **1977** ல் ஜல்ஸா ஸாலானா ரப்வா தவிர, ஸியாஃபத் - விருந்தோம்பல் துறையில் நாஸிர் ஆகவும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். **1977** முதல் **1987** வரை விருந்தோம்பல் துறையில் நாஸிர் ஆக இருந்தார்கள்.

இவரது நினைவாக இவரது மனைவி ரஸியா கானம் தவிர ஒரு மகன் இரு மகள்கள் இருக்கிறார்கள்.

இவரது மனைவி கூறுகிறார்: எங்களது திருமணத்திற்குப் பிறகு இவருக்கு எவ்வளவு அலவுன்ஸ் கிடைத்ததோ அதிலிருந்து சந்தாவை முதலில் எடுத்து வைத்து விடுவார். எனக்கும் அவ்வாறே அறிவுறுத்தினார். முதலில் சந்தாவை கொடு பிறகு மற்ற செலவு செய் என்று கூறுவார். வஸிய்யத் செய்யுமாறு எனக்கு வலியுறுத்திக் கூறினார்கள். தஹஜ்ஜுத் தொழக் கூடியவராக இருந்தார்கள். இறுதி மூச்சு வரை தொழுகையை முழுமையாகவும், குறித்த நேரத்திலும் தொழுது வந்தார். பிறர் குறைகளை மிகவும் மறைக்கக் கூடியவராக

இருந்தார். கனிவுமிக்க கணவராக இருந்தார். பிள்ளைகளுக்கு கருணையுள்ள தகப்பனார். எந்த உறவினருடனும் கோபம் கொள்ள மாட்டார். சமாதானத்திற்கு (எப்போதும்) முன்னாள் நிற்பார். **எல்லா கண்ணியங்களும் அல்லாஹ்வுக்கு உரியது** என்று கூறுவார். தனது சகோதர, சகோதரிகள் மற்றும் பிற உறவினர்களை நன்கு கருத்தில் கொள்வார்.

இவரது மகள் கூறுகிறார்: "எனது அம்மாவுடன் உரத்த குரலில் ஒரு நாளும் பேசியதில்லை. அவர் எங்களுக்கு தந்தை மட்டுமல்ல; எங்கள் நண்பராகவும் இருந்தார்கள். அறையில் தான் தஹஜ்ஜுத் தொழுவார். அவர் செய்யும் துஆ எனக்கு இப்போதும் நினைவில் உள்ளது. அதனை மீண்டும் மீண்டும் கூறுவார். **காதிரே தவானா ஆஃபாத் சே பசானா - எல்லா ஆற்றலும் வாய்ந்தவனே! எம்மை ஆபத்துகளிலிருந்து காப்பாற்றுவாயாக!** எமது தந்தை எங்களுக்கு துஆக்களின் கருவூலமாக இருந்தார்கள்."

உண்மையான பொருளில் வாழ்வை அர்ப்பணிக்கும் உரிமையை வழங்கியவர் ஆவார். உண்ணல், குடித்தல், உறங்கள் தவிர மற்ற அனைத்து நேரமும் ஜமாஅத்தினுடைய பணியை மட்டுமே செய்துள்ளார். எந்த ஒரு நேரத்தையும் வீணாக்கியதில்லை.

இவரது மகன் எழுதியுள்ளார்: இவர் எப்பொழுதும் இரு விஷயங்களை வலியுறுத்தி வந்தார்கள். ஒன்று தொழுகை. அடுத்து, காலத்தின் கலீஃபாவின் குத்பா. இரண்டையும் எந்நிலையிலும் விட்டு விடக் கூடாது. காலத்தின் கலீஃபா வழங்கும் வழிகாட்டல்களை முழுமையாக அமல் செய்ய வேண்டும் என்று கூறுவார்கள்.

நான் எல்லா நாஸிர்கள், வக்கீல்கள் ஆகியோரிடம் வெளியில் ஜமாஅத்துகளுக்கு சென்று மக்களை சந்தியுங்கள்; எனது சலாம் கூறுங்கள் என்றேன். சவுத்ரி சாஹிபும் இரு முறை சென்றார். சர்கோதா மாவட்டம் இவரது பொறுப்பில் இருந்தது. ஒரு வீட்டை கூட விட வில்லை. ஒவ்வொரு வீட்டுக்கும் சென்றார். எனது சலாத்தை எட்ட வைத்தார்.

என்ன பிரச்சனையாக இருப்பினும், அது சிறிதாயினும் பெரிதாயினும், தவறாகி விட்டாலும் சரி! அதனை கலீஃபத்துல் மஸீஹ் -க்கு தெரிய செய்ய வேண்டும் என்பதாகும். நிச்சயமாக அதனை தெரியப்படுத்த வேண்டும். இதனால் துஆவும் கிடைக்கும். சீர்திருத்தமும் ஏற்பட்டு விடும் என்று கூறி வருவார்கள். சில சமயங்களில் சில ஜமாஅத்துகளுக்கு செல்லும் போது, எங்களுக்கு ஏதாவது சொற்பொழிவு நிகழ்த்துங்கள் என்று கூறினால் மறுத்து விடுவார். எனக்கு கிடைத்த கட்டளையை மட்டும் செய்வேன் என்று கூறுவார்.

லயீக் ஆபித் சாஹிப் கூறுகிறார்: சிறு விஷயத்திலும் மிகவும் எச்சரிக்கையாக இருப்பார். எந்தவொரு **Draft bill** ஆக இருந்தாலும் அல்லது கடிதமாக இருந்தாலும் முழுமையாக படிக்காதவரை கையொப்பமிட மாட்டார். இது தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு மிக அவசியமான ஒரு விஷயமாகும். பார்க்காமல் கையொப்பமிடக் கூடாது. நேரத்தை மிகவும் பேணுவார். ஒவ்வொரு பணியையும் குறித்த நேரத்தில் செய்வதில் எந்த அளவு உறுதியான பழக்கம் இருந்தது என்றால், நேரத்தின் மீது சவாரி செய்பவராகவும் அவர் விரும்பும் போது அதனை திருப்புவர் போலவும் இருந்தார். இந்த அளவு நேரத்தை பேணியும் கூட, மிகவும் மரியாதை தெரிந்தவராக இருந்தார். பள்ளி வாசலுக்குச் தொழச் சென்றால் இறை தியானத்தில் மூழ்கி விடுவார்.

சமீவுல்லாஹ் ஸைய்யால் சாஹிப் கூறுகின்றார்: நல்ல பண்புகளை பொறுத்தவரை மகத்தான மனிதர். மிகவும் தயைமிக்க, வீரமிக்க, எப்போதும் மார்க்கத்துக்கு தொண்டு செய்யும் மனிதர், கிலாஃபத் மீது அளவு கடந்த அன்பு கொண்டவராக இருந்தார். புதிதாக வரக்கூடிய வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு மிக அழகிய முறையில் தர்பிய்யத் வழங்கக் கூடியவராக இருந்தார்.

ஹலீம் குறைஷி சாஹிப் கூறுகிறார்: அமைப்பு மற்றும் பொருளாதார விஷயத்தில் மிகவும் கண்டிப்பாக இருப்பார். தவறான நிர்வாகத்தை ஒருபோதும் சகிக்க மாட்டார். பொருளாதார விவகாரங்களை உன்னிப்பாக பார்த்து வந்தார்கள். பொருள்களின் விலைகளைக் குறித்து **up date** வாங்கிக் கொண்டே இருப்பார். ஒரு பில் வந்தால் **10**

ரூபாய் அதிகமாக இருந்தாலும் இன்ன கடையில் இதன் விலை **100** தான். நீங்கள் **110** ரூபாய் செலவு செய்துள்ளீர்களே என்று கூறுவார்கள்.

மாஜித் தாஹிர் சாஹிப் வக்கீலுத் தப்ஷீர் இலண்டன் எழுதுகிறார்: ஒவ்வொரு நொடியையும் மார்க்கப் பணிக்காக செலவிட்டார். பல்வேறு அலுவலக விவகாரங்களில் கலீஃபத்துல் மஸீஹ் இடமிருந்து சவுத்ரி சாஹிபுக்கு கிடைக்கப் பெறும் வழிகாட்டல்களின் படி தாமதமின்றி நடவடிக்கை எடுப்பார். நிச்சயமாக அவர் அமர்வதும் எழுவதும், அவரது பேச்சு அமைதி அனைத்தும் காலத்தின் கலீஃபாவின் கீழ் இருந்தது.

சிலர் காலத்தின் கலீஃபா கூறியதை விட ஜமாஅத்தின் சட்ட திட்டங்கள் மேலானவை; ஜமாஅத்தின் சட்ட திட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. அவற்றின் படிதான் செயல்படுத்தப்பட வேண்டும் என்று கூறுவர். அவர்களிடம், காலத்தின் கலீஃபா தரும் வழிகாட்டல்படி அமல் செய்ய வேண்டும்; இதுவே உங்களுக்கு சட்டமாகும் என்று கூறுவார்.

முபாரக் சித்தீக் சாஹிப் கூறுகிறார்: ஒருமுறை **T.I** காலேஜ்காரர்களுடன் மீட்டிங் நடந்தது. நான் சவுத்ரி சாஹிபிடம் கூறினேன். அல்லாஹ் உங்களுக்கு நீண்ட காலம் பணியாற்றும் வாய்ப்பு தந்துள்ளான். பெரும் சிறப்புகளை வழங்கியுள்ளான். எங்களுக்கு அந்த வெற்றியின் இரகசியம் கூறுங்கள்; ஏதேனும் அறிவுரை செய்யுங்கள் என்றதும் அவர் கூறினார். ஒரே ஒரு இரகசியம்தான். அது நமது அறிவு, சிந்தனையை ஒன்றுமற்றதாக நினையுங்கள். கண்ணை மூடிக்கொண்டு காலத்தின் கலீஃபாவை பின்பற்றுங்கள். அதற்கு, நான் கட்டுப்படுதலின் உரிமையை நிறைவேற்ற முழு முயற்சி செய்துள்ளேன் என உள்ளம் சாட்சி தர வேண்டும்.

அல்லாஹ் அவரது தகுதியை உயர்த்துவானாக! கிலாஃபத்திற்கு இவரைப்போன்று உதவி செய்யும் வல்லவர்கள் கிடைத்து வரட்டுமாக!

பாக்கிஸ்தானின் நிலைமைகளுக்காகவும் துஆ செய்து வாருங்கள். பாக்கிஸ்தானின் நிலைமையை அல்லாஹ் விரைவில் மாற்றுவானாக! அஹ்மதிகளுக்கு சுதந்திரமாக வாழ தவ்ஃபீக் தருவானாக!

அடுத்து நான் கூற உள்ள முக்கிய விஷயம் என்னவென்றால், கொரோனா தொற்று நோய் உலகில் பரவி உள்ளது. அதில் அஹ்மதிகள் செலுத்த வேண்டிய முன்னெச்சரிக்கைக்கான உரிமையை செலுத்தவில்லை. **U.K** விலும் செலுத்தவில்லை. அமெரிக்காவிலும் செலுத்தவில்லை. பாகிஸ்தானிலும் செலுத்தவில்லை. உலகில் எந்த நாட்டிலும் செலுத்தவில்லை. முழுமையாக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். மாஸ்க் அணிய வேண்டும். மாஸ்க் அணியும் போது சிலரது மூக்கு திறந்துள்ளது. ஆனால் மூக்கை மூட வேண்டும். அல்லது கழுத்தில் மாஸ்கை தொங்க விட்டுள்ளனர். இந்த மாஸ்கால் என்ன பயன்? பிறகு ஒவ்வொருவரும் அருகில் சென்று சந்திக்கின்றனர். சமூக இடைவெளி ஏற்படுத்துவதில்லை. அரசு நிர்ணயித்த சட்ட திட்டங்களின் படி செயல் படுவதில்லை. இவ்வனைத்து விஷயங்களின் படியும் நாம் செயல் பட வேண்டும். இல்லையெனில் இந்த தொற்று நோய் அடுத்தவருக்கு பரவிக்கொண்டே செல்லும். தற்காலத்தில் குறைந்தபட்ச அளவு பிரயாணம் செய்யவும் முயற்சி வேண்டும். தேவை இல்லாத பயணத்தை தவிர்க்க வேண்டும். எவ்வாறிருப்பினும் அல்லாஹ் இந்த தொற்று நோயை விரைவில் அழிப்பானாக! எந்த அஹ்மதி நோயுற்று இருந்தாலும் அவர்களுக்கும், அஹ்மதியல்லாதவருக்கும் அவர்கள் நோயுற்று இருந்தால் அல்லாஹ் பூரண குணம் நல்குவானாக!

தொழுகைக்குப் பிறகு சவுத்ரி சாஹிப் உடைய ஜனாஸா காயிப் தொழுகையையும் நான் தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ
وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللهِ رحمكم الله اِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ
لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: முஅல்லிம் நிஸாமுத்தீன்)